## பில்டிங் மற்றீரியல் கோப்பரேஷன் லிமிட்டட் - 2015

பில்டிங் மற்றீரியல் கோப்பரேஷன் லிமிட்டட்டின் (‘‘கம்பனி’’) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இவ் அறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ரூபா 60,609,649 தேறிய நட்டத்தை கம்பனி அடைந்திருந்தது. ஆகையால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் மொத்தப் பொறுப்புக்கள் அதன் மொத்தச் சொத்துக்களை ரூபா 418,146,224 ஆல் விஞ்சியிருந்ததுடன் கம்பனியின் நடைமுறைப் பொறுப்புக்கள் அதன் நடைமுறைச் சொத்துக்களை ரூபா 160,987,462 ஆல் விஞ்சியிருந்தது. மேலும் கம்பனியின் குறித்த சில உற்பத்திப் பொருட்களிற்கான மொத்தலாப எல்லை எதிர்மறையாக இருந்ததுடன் கடன் மீள்கொடுப்பனவுகள் செலுத்தப்படாமை மற்றும் கம்பனிக்கு எதிராக பல்வேறு தரப்பினர்களில் சிலரால் ஏற்கனவே சட்ட வழக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை என்பன காரணமாக கம்பனியின் ஆதனங்களின் சட்டரீதியான உரித்திற்காக பல்வேறு தரப்பினர்கள் உரிமை கோரியிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது. இந் நிகழ்வுகள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடந்தியங்குவதற்கான கம்பனியின் ஆற்றல் தொடர்பாக குறிப்பிடத்தக்களவு ஐயப்பாட்டினை ஏற்படுத்தக்ககூடிய பொருண்மையான நிச்சயமற்ற நிலைமை காணப்படுவதனை சுட்டிக்காட்டுவதனால் கம்பனியானது சாதாரண வணிக செயற்பாட்டின் போது அதன் சொத்துக்களை காசாக்குவதற்கும் அதன் பொறுப்புக்களை தீர்ப்பதற்கும் அதனால் முடியாதிருந்தது. மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் (மற்றும் அதற்கான குறிப்புக்கள்) முகாமைத்துவத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டிருத்தல் அல்லது ஏனைய தணிப்புக் காரணிகள் காணப்படுதல் தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்களுடன் சேர்த்து இவ் விடயத்தை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) கம்பனியானது சில அரசாங்க நிறுவனங்களிடமிருந்து கடன்கள், கடன்பெறுகைகள் மற்றும் முற்பணங்களை பெற்றிருந்த போதிலும் அத்தகைய கடன்கள், கடன்பெறுகைகள் மற்றும் முற்பணங்கள் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீளாய்வு செய்வதற்காக வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு, எச்டிஎவ்சீ வங்கி மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனவு தாபனம் (சீடபிள்யூஈ) என்பவற்றிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் அல்லது முற்பணங்களிற்கான உரிய கடன் உடன்படிக்கைகள் அல்லது ஏனைய ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் எனக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 283,283,813 கூட்டுத்தொகையான கடன் மீதிகள், கடன்பெறுகைகள் மற்றும் முற்பணத்தின் நியாயமான சமர்ப்பித்தல் தொடர்பாக என்னால் திருப்திப்படுவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. மேலும் உரிய கடன் உடன்படிக்கைகள் அல்லது ஏனைய ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் காணப்படாததன் காரணமாக 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 1,431,854 தொகையான நிதிக் கிரயத்தின் பூரணத்தன்மையை சரிபார்ப்பதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

(இ) கம்பனியானது நிலையான சொத்துக்கள் பதிவேடு அல்லது ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கான விபரமான பட்டியல்களை பேணியிருக்காததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 35,478,584 கூட்டுமொத்த தொகையில் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி கணிப்பீடு மற்றும் பூரணத்தன்மையை கருத்தில் கொண்டு மாறும்தன்மையை உறுதிப்படுத்தவோ அல்லது சரிபார்க்கவோ என்னால் முடியாதிருந்தது.

(ஈ) கம்பனியானது நீண்டகால பெறவேண்டிய நிலுவைகளிற்கான நட்டக்கழிவை (அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களிற்கான ஏற்பாடுகள்) மேற்கொள்ளவோ அல்லது அவற்றின் அறவீட்டுத்தன்மை தொடர்பாக பொருத்தமான விளக்கங்களை வழங்கவோ இல்லை. ஆகையால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 21,053,227 தொகையான வியாபார பெறவேண்டியவைகளின் அறவீட்டுத் தன்மை தொடர்பாக என்னால் திருப்திப்பட முடியாதிருந்தது.

(உ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 3,895,553 தொகையான பதவியணியினரிடமிருந்து பெறவேண்டியவைகளிற்கு (ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட முற்பணங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நிதிக்கூற்றுக்களிலுள்ள நானாவிதக் கணக்கு) எதிராக கம்பனியானது பெறுவனவுகளை தீர்ப்பனவு செய்திருக்கவில்லை. ஆகையால் அறிக்கைத் திகதியிலுள்ளவாறு அக் கணக்கு மீதி தீர்ப்பனவு செய்யப்படாததாக காணப்படுகின்றது.

(ஊ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 38,299,070 தொகையான பிற்போடப்பட்ட வருமானத்தின் (இழப்பீட்டிற்கான அரசாங்க மானியம்) உள்ளதன்மை, உரிமை மற்றும் கடப்பாட்டினை சரிபார்ப்பதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 148,966,070 கூட்டுத்தொகையான வியாபார நிலுவை மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை, பீரீரீ, வியாபாரக் கடன்பட்டோர்கள், முன்னைய ஆண்டு சீராக்கங்கள், பொருளிருப்புக்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட ஒதுக்கக் கணக்கின் வரவு மீதி தொடர்பாக போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்று எனக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல்கள் மற்றும் பொதுப் பேரேட்டில் காட்டப்பட்ட மூன்று கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் நிலுவைக் கடன் என்பவற்றிற்கிடையே முறையே ரூபா 12,458,885 மற்றும் ரூபா 27,549,830 வேறுபாடுகள் காணப்பட்டன.

(ஐ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 546,173 தொகையான பிற்போடப்பட்ட வரிச் சொத்தின் அறவீட்டுத் தன்மை தொடர்பாக போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

(ஒ) எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் மூலம் வேண்டப்பட்டவாறு கடப்பாடுகள் உள்ளடங்கிய தொடர்புபட்ட தரப்பினர் உறவுமுறைகள், கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிலுவை மீதிகளை கம்பனி இனங்கண்டு அவை தொடர்பான வெளிப்படுத்தல்களை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஓ) எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் மூலம் வேண்டப்பட்டவாறு நிதிச்சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் வகைப்படுத்தல்கள் தொடர்பாக உரிய வெளிப்படுத்தல்களை கம்பனி மேற்கொண்டிருக்கவில்லை. மேலும் செலுத்த வேண்டிய கடன்கள் தொடர்பாக சில கடன் செலுத்த தவறியமைகள் மற்றும் மீறல்கள் காணப்பட்டதென குறிப்பிடப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிடப்பட்டதன் காரணமாக ஆதனம், பொறி மற்றும் உபகரணம், வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள், பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள், கடன்கள் மற்றும் கடன்பெறுகைகள், வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள், நிதிக் கிரயம், தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் நிதிக் கருவிகளிற்கான தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களை என்னால் சரிபார்க்க முடியாதிருந்தது. இவ் விடயங்கள் காரணமாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று தொடர்பாக சீராக்கங்கள் எதாவது அவசியமா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாதுள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 மறுப்பு அபிப்பிராயம்**

மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க, இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை நான் வெளிப்படுத்தவில்லை.

**ஏனைய விடயம்**

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் பொதுத் தொழிலிலுள்ள இன்னொரு பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் கணக்காய்வு செய்யப்பட்டு 2017 பெப்ரவரி 15 ஆம் திகதி அந்நிதிக்கூற்றுக்கள் மீது மறுப்பு அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்தியிருந்தது.

**2.1.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

– மேலே குறிப்பிடப்பட்டவாறு கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றிருக்காததால் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை நான் வெளிப்படுத்தவில்லை.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்காய்விற்கான சான்றின்மை**

பின்வரும் கணக்கு விடயங்கள் அவ் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள சான்று காணப்படாததன் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதுள்ளது.

| **விடயம்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்படாத சான்று** |
|---|---|---|
| | **ரூபா** | |
| கடன்கள் மற்றும் கடன் பெறுகைகள் | 282,783,813 | கடன் உடன்படிக்கைகள் மற்றும் உறுதிப்படுத்தல்கள் |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் | 34,506,868 | உறுதிப்படுத்தல்கள் |
| மட்டுப்படுத்தப்பட்ட ஒதுக்கக் கணக்கு | (16,113,722) | விபரமான பட்டியல்கள் |
| குத்தகை கடன்கொடுத்தோர் | 663,938 | விபரமான பட்டியல்கள் |
| ஓய்வூதிய நலன் கடப்பாடு | 8,689,595 | விபரமான பட்டியல்கள் |
| வங்கி மேலதிகப் பற்று பீஓசீ ஹைடி பார்க் | (19,967,703) | உறுதிப்படுத்தல்கள் |
| வங்கி மேலதிகப்பற்று பீஓசீ கோர்பார்ரீ கிளை | (91,975,654) | உறுதிப்படுத்தல்கள் |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | | **இணங்காமைகள்** |
|---|---|---|
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | |
| (i) | நிதிப்பிரமாணம் 395 | வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்ந்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 127,451,480 கூட்டுத்தொகையான வரவு மீதிகள் மற்றும் ரூபா |

| | | |
|---|---|---|
| | | 5,404,784 கூட்டுத்தொகையான செலவு மீதிகளிற்குரிய கூட்டுத்தாபனத்தின் ஒன்பது வங்கி மீதிகள் தொடர்பாக கணக்கிணக்கங்கள் மற்றும் வங்கிக் கூற்றுக்களின் விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 1645 | கூட்டுத்தாபத்திற்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பில் பொது 267 படிவத்தில் சம்பவத்திரட்டுப் புத்தகங்கள் (Log Books) முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் VI ஆம் அத்தியாயத்தின் 2.10 ஆம் பிரிவு | ஆட்சேர்ப்புக்கள், இடம்மாற்றங்கள், பதவியுயர்வுகள், சம்பள ஏற்றக் கொடுப்பனவுகள் மற்றும் ஊழியர்களிற்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான கடிதங்களின் பிரதிகள் கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(இ)** | **2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை** | |
| (i) | 4.2.6 ஆம் பந்தி | காலாண்டு செயலாற்றல் அறிக்கைகள் வரிசை அமைச்சு மற்றும் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களம் என்பவற்றிற்கு காலாண்டு முடிவடைந்து 30 நாட்களில் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தகைய செயலாற்றல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 4.3 ஆம் பந்தி | சபைக் கூட்டக் குறிப்புக்கள் 10 நாட்களினுள் வரிசை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iii) | 5.1.3 ஆம் பந்தி | நாளதுவரையாக்கப்பட்ட வருடாந்த பாதீட்டுடன் சேர்த்து சபையால் அங்கீகரிக்கப்பட்ட நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதிகள் ஒவ்வொரு நிதியாண்டும் ஆரம்பிப்பதற்கு ஆகக்குறைந்தது 15 நாட்களிற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 5.2.5 ஆம் பந்தி | சபையின் நாளதுரையாக்கப்பட்ட ஒட்டுமொத்த பாதீடு தொடர்ந்துவரும் ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களிற்குப் பிந்தாமல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 6.5.1 ஆம் பந்தி | வரைபு வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஈ)** | **திறைசேரிச் சுற்றறிக்கைகள்** | |
| (i) | 1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | 2002 நவம்பர் 28 இன் ஐ/ஏ/ஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையால் அறிவுறுத்தப்பட்டவாறு கணனிகள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2009 ஏப்ரல் 26 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | அனைத்து ஊழியர்களும் அவர்களது வருகை மற்றும் வெளிச்செல்லல்களிற்காக கைவிரல் அடையாள இயந்திரங்களை பயன்படுத்துதல் வேண்டும். எனினும் கூட்டுத்தாபனம் கைவிரல் அடையாள இயந்திரமொன்றைப் பயன்படுத்தியிருக்கவில்லை. |
| **(ஊ)** | **2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம்** | |
| (i) | 220 ஆம் பிரிவு | சபையானது பணிப்பாளரிற்கு விடயம் தெரியவந்து இருபது வேலை நாட்களினுள் இப் பிரிவின் நோக்கங்களிற்காக கம்பனியின் பங்குதாரர்களின் அதிவிசேட பொதுக் கூட்டமொன்றிற்கு (ஈஜீஎம்) அழைப்பு விடுத்து அத்தகைய கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்ட திகதியிலிருந்து நாற்பது வேலை நாட்களிற்குப் பிந்தாமல் கூட்டத்தை நடாத்த வேண்டிய போதிலும் கம்பனியானது ஈஜீஎம் ஒன்றை நடாத்துவதற்கு தவறியிருந்தது. |
| (ii) | 150 ஆம் பிரிவு | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு அறிக்கையிடல் திகதியின் பின்னர் ஆறு மாதங்களினுள் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு கம்பனி தவறியிருந்தது. |
| (iii) | 133 ஆம் பிரிவு | கம்பனியின் ஐந்தொகைத் திகதியின் பின்னர் ஆறு மாதங்களிற்கு பிந்தாமலும் முன்னைய வருடாந்த பொதுக் கூட்டத்தின் பின்னர் பதினைந்து மாதங்களிற்கு பிந்தாமலும் ஒவ்வொரு கலண்டர் ஆண்டிற்கும் ஒரு தடவை நடாத்தப்பட வேண்டிய பங்குதாரர்களின் வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு கம்பனி அழைப்பு விடுக்க வேண்டிய போதிலும் கம்பனி இத் திகதி வரை வருடாந்த பொதுக் கூட்டத்தை நடாத்த தவறியிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடு அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 20,377,779 நட்டத்துடன் ஒப்பிடும் போது ரூபா 60,609,648 நட்டத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 40,231,869 ஆன மேலுமொரு வீழ்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. புரள்வில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சி மற்றும் நிர்வாகச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ஏற்பட்ட இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

### 3.2.1 முக்கிய கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் முக்கிய சில விகிதங்கள் பின்வருமாறு உள்ளன.

(அ) கம்பனியின் நடைமுறை விகிதம் முன்னைய ஆண்டின் 0.643 தடவைகளுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் 0.410 தடவைகள் வரை குறைவடைந்திருந்ததுடன் இது பலவீனமான தொழிற்படு மூலதன நிலைமையை சுட்டிக்காட்டுகின்றது.

(ஆ) மொத்த உரிமை மூலதனப் பெறுமதி எதிர்மறையாக இருப்பதால் உரிமை மூலதனத்திற்கான கடன் விகிதத்தை கணிப்பிடுவது முக்கியமானதாக இருக்காததுடன் கடன் மூலதனம் எதுவும் காணப்படாதமை அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகள் காணப்படாததன் காரணமாக அவற்றை மதிப்பிட முடியாதிருந்தது. மேலும் கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கம்பனியானது கணனிமயப்படுத்தப்பட்ட சம்பளப் பட்டியல் முறைமையொன்றில் முதலீடு செய்திருந்ததுடன் அச் சம்பளப் பட்டியலின் ஒரு பகுதி கைமுறையாக மேற்கொள்ளப்பட்டிருந்ததால் சம்பளப் பட்டியல் தயாரிப்பிற்காக அம் முறைமை ஆக்கபூர்வமாக தற்போது பயன்படுத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. மேலும் கம்பனியானது ஏற்கனவேயுள்ள பொருளிருப்பு முறைமையிலிருந்து இருப்பு பெறுமதிகளை மாதாந்தம் பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததால் பொருளிருப்பு முறைமையின் செயற்திறன் கேள்விக்குரியதாக உள்ளது.

### 4.3 பெறுகைகள்

2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.4.3 ஆம் பிரிவின் பிரகாரம் பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்களின் பட்டிலொன்று ஆகக்குறைந்தது ஆண்டொன்றிற்கு ஒரு தடவை காலரீதியாக நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியானது மீளாய்வாண்டிற்காக அத் தேவைப்பாட்டை பூர்த்திசெய்யத் தவறியிருந்தது.

### 4.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்றில்லாமல் கம்பனியானது 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை 72 சதவீதத்தால் ஏற்கனவேயுள்ள பதவியணியை அதிகரித்திருந்தது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) சொத்துக்கள் முகாமைத்துவம் | நிலையான சொத்துக்களின் பௌதீக ரீதியான மெய்மையாய்வை மேற்கொள்ளத் தவறியமை |
| (ஆ) நிதி முகாமைத்துவம் | (i) கொடுப்பனவு அங்கீகார எல்லைகளிற்கான தரவுகள் காணப்படாமை.<br>(ii) கொடுப்பனவுகள், சிட்டைகள் மற்றும் பெறுவனவுச் சிட்டைகளிற்கான தொடரிலக்கங்கள் பேணப்படாமை.<br>(iii) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்படாமை.<br>(iv) கூட்டுறவு வாடிக்கையாளர்களிற்கான கடன் எல்லைகள் பேணப்படாமை. |
| (இ) தகவல் முறைமைகள் | கணனிகளிற்கான பயன்படுத்துநர் உள்நுழைவதற்காக பொதுவான இரகசியக் குறியீடு பயன்படுத்தப்படாமை |